# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII code of Criminal Procedure)**

**In the Court of XI Additional Special Judge for CBI Cases**

**(CBI Cases Relating to Banks and Financial Institutions)**

**Chennai - 600 001.**

| | |
|---|---|
| Calendar Case | : C.C. No.11/2006 |
| Deposition of witness for | : PW-20 |
| Name of the witness | : Mr. P.Mohanraj |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6th day of November 2025.

---

**(A1, A36, A39, A45 present. A3 company rep. by A4. A6, A9, A13, A14, A18, A19, A21, A22, A26, A33, A35, A38, A44, A47, A48 Charge abated. A8, A11, A15, A16, A17, A20, A24, A34 Discharged. A23 Died, await Death Certificate. A43 Split up in CC No.08/2018. Other accused absent. Petition u/s 317 CRPC filed and allowed).**

1ம் தரப்பு குறுக்கு விசாரணை

எதிரிகள் சுப்பிரமணியன் மற்றும் முரளிதரன் ஆகியோரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற நீதிதுறை நடுவரின் நடவடிக்கையில் எதிரிகள் கைது செய்யப்பட்டதாக உள்ளது. ஆனால் அவர்கள் பிணையில் வெளியில் வந்து என்னுடைய அழைப்பாணையின் பேரில் வந்தார்களா அல்லது கைது செய்யப்பட்டபின் சிபிஐ வசமிருந்து நீதிமன்றத்திற்கு வந்தார்களா என்று எனக்கு தெரியாது. இந்த இருவருக்கும் அறிவுரைகூறும்போது நீர் இந்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி சாட்சியம்அளிக்காவிடில் உங்களை இந்த வழக்கு முதல் தகவல் அறிக்கையுள்ள குற்றங்களுக்கு தனியாக ஒரு வழக்கும், மற்றும் பொய்சாட்சியம் அளித்த குற்றத்திற்கு மற்றொரு வழக்கும் ஆக 2 வழக்குகள் உங்கள் மீது தொடரப்படும் என்ற

குறிப்பான அறிவுரையை அளித்தேனா என்றால் இல்லை. ஆனால் நிபந்தனைப்படி நடக்காவிட்டால் இந்த குற்றத்தை பொறுத்தமட்டிலும் உங்களுக்கு எதிராக வழக்கு தொடரப்படும் என்று மட்டும் கூறியுள்ளேன். இந்த இருவருக்கும் அளித்த மன்னிப்பு உத்திரவில் இந்த இருவருடைய வாக்குமூலங்களிலும் அவர்கள் தங்களை குற்றத்தில் உட்படுத்திக்கொள்ளாதவகையில் (Exculpatory) அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன். எனது உத்திரவில் எதிரிகளுக்கு குற்றம் புரிய Intention இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை. ஆனால் அவர்கள் தெரிந்தே செய்ததாக குறிப்பிட்டுள்ளேன். எதிரிகளை என் முன்பு ஆஜராக சம்மனை சிபிஐ மூலம்தான் கொடுத்தேனா என்று ஆவணத்தை பார்த்தால் சொல்ல இயலும். முதல் தகவல்அறிக்கையை பார்த்தேன். அதில் இந்த 2பேரும் எதிரிகளாக இல்லை. 2எதிரிகள் மீது அதனால் சுமத்தப்பட்ட முதல்நிலையிலான குற்றசாற்று எனக்கு தெரிந்திருக்கவில்லை. 2எதிரிகளும் சிபிஐயின் Informal custodyல் இருந்தார்கள் என்றாலும், ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கும்போது தன்னிச்சையாக அளிக்கவில்லை என்றாலும், என்முன்னிலையில் ஆஜரானபோது தன்னிச்சையாக ஆஜராகவில்லை என்று சொன்னால் சரியல்ல.

(2ம் எதிரியின் வழக்கறிஞர் மேற்கண்ட 1ம் எதிரியின் குறுக்குவிசாரணையை Adopt செய்கிறார்.)

Taken down before me in the open court read over to the witness and acknowledged by him/her to be correct.

VADIVELU T P — Digitally signed by VADIVELU T P, Date: 2025.11.06 17:55:56 +0530

06.11.2025 XI Additional Special Judge for CBI Cases.